**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Summary Trial case No: | | STC.1054/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | **அ.சா.1** |
| Name | : | **செல்லம்மாள்** |
| Father's Name/Husband Name: | | **குணசேகரன்** |
| Village | : | **வடக்கலூர்** |
| Taluk | : | **குன்னம்** |
| Age | : | 55 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.06.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி பச்சமுத்து ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மாமனார். எங்களுக்கு சொந்தமான இடத்தை அளந்து வீடு கட்டும் போது ஆஜர் எதிரி என்னிடம் பிரச்சனை செய்து என்னை திட்டிவிட்டு கையால் அடித்து கீழே தள்ளிவிட்டார். சம்பவம் குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரில் என்ன எழுதி உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி அடித்ததற்காக நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த தேதி மாதம், என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது

என்றால் சம்பவம் நடந்து நான்கு வருடம் ஆனதால் எனக்கு நினைவில்லை. புகாரில் எதிரி பேசியதாக சொல்லப்படும் ஆபாச வார்த்தைகள் ஏதும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. புகாரில் ஆஜர் எதிரி கையால் எந்த இடத்தில் என்னை அடித்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் Whitener வைத்து திருத்தம் செய்து தேதி , மாதம் மற்றும் வருடத்தை மேலே எழுதி உள்ளார்கள் என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரி என்னை அடிக்கவில்லை என்பதால் தான் நான் மருத்துவமனையில் சேரவில்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.